LIBRARY
23 SEP 1966
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 12th March 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker, (The HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

விவசாயக் கருவிகள்.

* 257 கேள்வி—**திரு. செ. மாதவன்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வழங்குவதை எண்ணிக்கையில் அதிகரிக்க ஏதேனும் திட்டமுண்டா ?

(இ) அதிக பம்பு செட்டுகள் வழங்க மத்திய அரசாங்கம் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளதா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தினுடைய விவரம் என்ன ? எவ்வளவு உதவி மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் எதிர்பார்க்கிறது.

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்கார் ரூ. 25.70 லட்சம் கொடுத்தார்கள். மறுபடியும் 25 லட்சம் கொடுத்தார்கள். இது வரை 50 லட்சத்தி சொச்சம் கொடுத்திருக்கிறார்கள். மேலும் 130 லட்சம் நாம் கேட்டிருக்கிறோம். இதிலே 30 லட்சம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. செ. மாதவன் : ஏற்கனவே பம்ப் செட் வழங்கப் பட்டிருக்கிறது. வழங்கப்பட்ட பம்ப் செட்டுகள் விவசாயிகளுக்குப் போதவில்லை என்ற குறை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பம்ப் செட்டுகள் வழங்கப்படுகின்ற முறையும் உதவித் தொகையும் மாற்றம் செய்யப்படவேண்டும் என்ற யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ? மத்திய சர்க்கார் சப்சிடி மூலமாக மாநில சர்க்காருக்கு மேலும் உதவி செய்ய முன் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அனேகமாக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறது. ஆனால், அந்தப் புள்ளிவிவரம் இல்லை. நாம் போர்டு ஆஃப் ரெவின்யூவை 400 ஆயில் என்ஜின்களை வழங்கச் சொல்லியிருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகளிடமிருந்து எவ்வளவு பம்ப் செட்டுகளுக்கு விண்ணப்பம் வந்தது, மாவட்ட வாரியாக தேவை பூர்த்தி செய்யப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மா. தண்டாயுதபாணி : தற்போது வழங்கப் பட்டுள்ள தொகையிலே மத்திய சர்க்கார் சப்சிடி கொடுக்கிறதா ? அல்லது மாநில சர்க்காரே கொடுக்க முன் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரின் உதவியை நாடுகிறோம். எவ்வளவு சப்சிடி கொடுத்தார்கள் என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகையைக் கொடுக்கிற நேரத்தில் கம்பெனிக்காரர்களின் பேரில் கொடுக்கிறார்கள். கம்பெனிக்காரர்கள் விலையைக் கூட்டிவைத்துவிடுகிறார்கள். ஆகையால், விவசாயிகள் பேருக்கு அந்தச் செக்கைக் கொடுத்தால், அவர்களே தேர்ந்தெடுத்து குறைந்த விலைக்கு வாங்கலாம். ஆகையால், அப்படிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு செக் கொடுப்பதற்கு யோசிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது கையாண்டுவரும் முறை நல்ல முறை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்ப் செட் வழங்கக்கூடிய எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமென்ற கருத்தையொட்டி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மத்திய சர்க்கார் நிதி அமைச்சராக இருந்தபோது மாநில சர்க்கார் உதவி கேட்டால் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை கொடுக்க வேண்டுமென்ற அறிக்கை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. வெ. ராமைய்யா : தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் மட்டும் அல்ல. நம் அரசாங்கமேகூட இந்தக் கருத்தைப் பரிசிலனை செய்தது. கிணறுகளுக்கு, பம்ப் செட்டுகளுக்குக் கொடுக்கக் கூடிய தொகைகளின் அளவை உயர்த்தவேண்டுமென்ற அடிப்படையில், ராஜ்யத்தில் இருக்கிற மாவட்டக் கலெக்டர்களைக் கலந்து பேசி ஒரு கிராஷ் ப்ரோக்ராம் போட்டால் ஒவ்வொ மாவட்டத்திலும் எவ்வளவு பம்ப் செட்டுகள் தேவைப்படும் என்ற புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டு அந்த அடிப்படையில் நம் ராஜ்யத்தில் இருக்கிற நிதி வசதிகளைக் கொண்டு வருஷா வருஷம் கொடுக்கக்கூடிய பம்ப் செட்டுகளின் எண்ணிக்கையை விட அதிகமாகக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் உதவி எவ்வளவு வருகிறதோ, அதையும் கொடுக்கவேண்டிய அடிப்படையில் திட்டத்தை உருவாக்க இருக்கிறோம்.

12th March 1966]

திரு. து. ப. அழகமுத்து : பம்ப் செட்டுகள் வாங்கி வைத்த பிறகு மின்சார கனெக்ஷன் கிடைக்காத காரணத்தினல் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. மின்சார கனெக்ஷன் கிடைப்பதற்குள்ளே கொடுத்த கடனை விவசாயிகளிடமிருந்து திரும்ப வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால், மின்சார கனெக்ஷன் கிடைக்காத இந்தக் குறையைப் போக்கு வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : The Government of India have been addressed for assistance for rural electrification also. இது சம்பந்தமாக மத்திய சர்க்காருடைய உதவியைக்கேட் டிருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : ஹரிஜன நல இலாக்காவிலே ஹரிஜனங் களுக்குக் கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்ற தொகை சப்சிடியாகக் கொடுக்கப்படுகிறது. அதுபோல் ஹரிஜனங்களுக்கு பம்ப் செட்டுக்குக் கொடுக்கும்போது கடனுக அல்லாமல் சப்சிடியாகவே கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டம் வைத்திருக் கிறதா? அப்படி இல்லையென்றால் இனிமேலாவது இதுபோன்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : ரூ. 1,500 கிணறுகளுக்காக இமைாகக் கொடுக்கிறோம். பம்ப் செட்டுகள் வைத்திருக்கிறவர்கள் போரிங் போட்டு தண்ணீர் எடுப்பதில் அந்தச் செலவு குறைவாக இருந் தால் பார்க்கலாம்.

* 258 கேள்வி—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் முடிய விவசாயி களுக்குத் தவணை முறையில் எத்தனை டிராக்டர்கள் வழங்கப பட்டன?

(இ) எந்தெந்த கம்பெனிகள் மூலமாக என்னென்ன டிராக்டர் ரகங்கள் வழங்கப்பட்டன?

(உ) மேற்படி டிராக்டர் ஒன்றுக்கு என்ன விலை ஆகிறது?

(எ) விவசாயிகளுக்குச் சலுகை காட்டும் வகையில் அவை களை அடக்க விலையில் குறைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கின்றதா?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) முதல் (எ) வரை : சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த மேஸி பர்கூஸன் டிராக்டர்களுக்குத்தான் கடன் வழங்கப்படுகிறது, ஆனல், இதை ரிப்பேருக்குக் கொண்டுபோகும்போது, மற்ற

---

a 112–113ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.